# மணிப்பூர் மக்களை காக்க மனசாட்சியோடு பிரதமர் கலவரத்தை அடக்குவாரா?

இந்திய அரசியல் வரலாற்றில் எல்லா மாநிலத்திலும் பல மொழி பேசும்மக்கள்.பல சமுதாய மக்கள் வாழ்ந்து வருகிறார்கள் எல்லா மாநிலங்களிலும் ஒற்றுமையாக வாழ்ந்து வருகிறார்கள் மதத்தால் மொழியால் யாரையும் பிரிக்க முடியாது ஒன்று பட்டு வாழும்மக்களை இந்தியாவில் எந்த ஒரு மாநில மக்களையும் வெளியேற்றவும் முடியாது அவர்களை தனிமை படுத்தவும் முடியாது.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்தியாவில் மணிப்பூர் மாநிலத்தில் கடுமையான தாக்குதல்கள் நடத்தி பெண்களின் கற்பை சூறையாடி கூட்டுப்பாலியல் பலாத்கார வன்முறை பாலியல் பலாத்காரம் செய்து படுகொலை செய்வது சுதந்திர இந்தியாவில் அண்ணல் மகாத்மா காந்தி அவர்கள்

ரத்தமின்றி

கத்தி இன்றி

அகிம்சை முறையில்

மனிதநேய முறையில் ஒட்டுமொத்த மக்களும் சத்தியாகிரக போராட்டம் நடத்தி ஆங்கிலேயரிடமிருந்து இந்திய நாட்டுக்கு சுதந்திரம் பெற்றுக் கொடுத்த அண்ணல் மகாத்மா காந்தி வழியில் செயல்படாமல் இந்த சுதந்திர இந்தியாவில் ஒரு மாநிலத்தில் வாழுகிற மக்கள் அதாவது இரண்டு சமுதாய மக்கள் அங்கு வாழுகிற நிலைப்பாட்டில்

சமவெளியில் மெய்திஇனமக்களும் மலை பிரதேசத்தில் மலை வாழ் மக்களாக குக்கி .நாகா இனமக்கள் வாழ்ந்து வருகிறார்கள்

இந்த நிலையில் மார்ச் 27ஆம் தேதி மணிப்பூர் உயர் நீதிமன்றம் மெய்திஇன மக்களுக்கு பழங்குடி அந்தஸ்து அதாவது எஸ்.டி அந்தஸ்து பிரிவு வழங்க பரிசீலிக்கவேண்டும் என ஆணை பிறப்பித்தது.

இந்த உத்தரவு வந்த பிறகு மலை பிரதேசத்தில் வாழும் குக்கி. நாகா இன மக்கள் நம்முடைய உரிமை பறிபோய் விடுமோ என்ற அச்சத்தில் பயத்தில் மே மாதம் மூன்றாம் தேதி பிரமாண்டமான அமைதியான ஊர் வலம் நடத்தி இருக்கிறார்கள்.

இந்த ஊர்வலம் நடத்திய மறுநாள் மெய்தி இன மக்கள் கடுமையான ஆத்திரம் அடைந்து இதற்கு எதிர்ப்பு தெரிவித்து நடத்திய கொடூரமான வன்முறை சம்பவங்கள் பெரிய கலவரமாக உருவெடுத்து கடுமையாக குக்கி இன மக்கள் வன்முறையாளர்களால் தாக்குதலுக்கு ஆளானார்கள்.

**கே.செல்வராஜ்**
முன்னாள் எம்.எல்.ஏ.
கழக செய்தி தொடர்பு
துணைச் செயலாளர்,



ஏராளமான ஆண்கள் பெண்கள் அடிபட்டு வீடுகளை எல்லாம் இழந்தார்கள் ரோட்டிலே வருகிற போகிற கார்கள் மோட்டார் சைக்கிள் எல்லாம் தீவைத்துக் கொளுத்தப்பட்டது மெய்தி இன ஆண்கள் குக்கி இன மக்களை குறிப்பாக பெண்களை மானபங்கப்படுத்தி பாலியல் பலாத்காரம் செய்து கொடுமை படுத்துகிற செயலில் இறங்கி விட்டார்கள் நடந்த சம்பவங்கள் எதுவும் பத்திரிகையாளர்களிடமோ செய்தியாளர்களிடமோஊடகங்களில் கூட வெளிவராமல் பார்த்துக் கொண்டார்கள்.

மே நான்காம் தேதி குக்கி இன மக்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேர் மெய்தி இனகும்பலிடம் மாட்டிக் கொண்டார்கள்.

அப்பா மகன் 21 வயது மகள் 42 வயது ஒரு பெண் 52 வயதில் ஒரு பெண் இவர்களை கடுமையாக தாக்கி தந்தை கண்முன்னே 21 வயது மகளையும் 42 வயது பெண்ணையும் ஆடைகளை எல்லாம் அகற்றச் சொல்லி நிர்வாணமாக்கி இழுத்துச் சென்றார்கள் இதில் என்ன கொடுமை என்றால் அங்கு காவலுக்கு இருந்த காவல்துறையைச் சேர்ந்தவர்களே இவர்களை வன்முறையாளர்களுக்கு கலவரக்காரர்களுக்கு சொல்லி இழுத்து வந்து ஒப்படைத்து இந்த கொடுமைகளை செய்திருக்கிறார்கள் இந்த நிர்வாணப்படுத்தப்பட்ட பெண்களை ஊர்வலமாக தெருக்களில் அழைத்து வந்து காட்டுப் பகுதிக்கு கடத்திச் சென்று கூட்டு பலாத்காரம் கொடுமைகள் செய்து அவர்கள் கடுமையாக தாக்கப்பட்டு அதில் ஒருவர் சம்பவ இடத்திலேயே இறந்து விட்டார் ஒரு பெண் பகிரங்கமாக அங்கே சொல்லுகிறார்.

எங்களை இந்த சித்திரவதை செய்வதற்கு காரணமே காவல்துறை தான் இவர்கள்தான் எங்களை அவர்களுக்கு காட்டி கொடுத்தார்கள் என்று சொன்ன அந்த பெண்ணும் இறந்து விட்டார்.

ஊடகங்களில் இந்த நிகழ்ச்சியை ஒளி பரப்பியதை பார்த்து ஒட்டுமொத்த இந்திய மக்களும் கொதித்து எழுந்தார்கள் கண்ணீர் வடித்தார்கள் இப்படி ஒரு சம்பவம் இந்தியாவில் நடக்கிறது இதை யாரும் கேட்க மாட்டார்களா அப்பாவி மக்களுக்கு பாதுகாப்பில்லையா என இந்திய மக்கள் அச்சத்தோடு பார்க்கிறார்கள்.

ஒன்றியத்திலும் மணிப்பூர்மாநிலத்திலும் பி.ஜே.பி. அரசு இருக்கிறது இவர்கள் இதை தடுக்க மாட்டார்களா பாரதப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் அமைதியாக இருக்க வேண்டும் என்று சொல்லுகிறார் வெளிநாடுகளுக்கு சென்றுவருகிறார்,

இந்திய நாட்டில் இப்படி ஒரு கலவரம் நடக்கிறது அதுவும் பெண்கள் மானபங்கப்படுத்தி கொலை செய்வதை பார்த்துக் கொண்டிருக்கலாமா உலகம் முழுவதும் செல்லுகிற பாரதப் பிரதமர் கர்நாடகாவில் தேர்தல் பிரச்சாரத்திற்காக சென்ற பாரத பிரதமர் ஏன் மணிப்பூர்மாநிலத்தில் நடந்து வரும் கலவரத்தை அடக்குவதற்கு செல்லவில்லை?

கலவரம் என்பது ஏற்பட்டால் ஓரிரு நாட்களில் அதை அடக்கினால் உண்மையாகவே அரசாங்கம் கலவரத்தை அடக்கியது சரியானது என பகிர்ந்து கொள்ளலாம்.

ஆனால் தொடர்ந்து 65 நாட்களுக்கு மேல் கலவரம் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது என்றால் இதற்கு அரசு கலவரக்காரர்களைஅடக்காமல் ஒடுக்காமல் உதவுகிறது என்பது தான் வெட்ட வெளிச்சமாக தெரிகிறது.

முதலமைச்சர் அந்த மாநிலத்தில் அரசியல் லாபத்திற்காக அதிகாரிகள், காவல்துறையினர் ஒரு இன மக்களுக்கு உதவியாக செயல்படுகிற விதத்தில் செயல்பட்டு வருவதை கண்டிக்கவில்லை அடக்கவில்லை இந்த கலவரபூமியில் ஒரு நாளும் அவர் அனைத்து மக்களும் அமைதியாக வாழ வேண்டும் என்று எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஒன்றிய அரசும் அதற்கான நடவடிக்கைகளை எடுக்கவில்லை இது தொடர்ந்தால் நாட்டில் என்ன நிலை ஏற்படும் என்பது பாரத பிரதமர்அவர்களுக்கு தெரியாதா அரசினுடைய உள்துறை அமைச்சருக்கும் பிரதமருக்கும் உளவுத்துறை மூலம் என்ன நடக்கிறது என்று உடனுக்குடன் அறிக்கை கொடுத்துக் கொண்டிருப்பார்களே தகவல் கொடுத்து கொண்டு இருப்பார்களே ஏன் இந்த கலவரத்தின் உண்மை நிலை தெரிந்து செயல்படுவதற்கு ஒன்றிய அரசுஏன் தவறிவிட்டது.

நியாயம் தானா மனிதநேயமிக்க இந்திய நிலைபாட்டில் ஒருமைப்பாட்டை நிலை நிறுத்த ஏன் எந்த நடவடிக்கையும் ஒன்றிய அரசு எடுக்கவில்லை இந்த கலவரத்திலும் கூட அரசியல் செய்வது தர்மம் தானா?

நிரந்தரமாக மலை வாழ் மக்கள் வாழும் பகுதியில்குக்கி. நாகாஇன மக்களும் வாழ்கிறார்கள் கீழ் பகுதியில் மெய்தி இனமக்கள் வாழ்ந்து வருகிறார்கள்.

தற்பொழுது கிடைத்த தகவல் படி குக்கி இன மக்கள் 114 பேர் படுகொலை செய்யப்பட்டதாக 10 எம்.எல்.ஏ.க்கள் கூட்டாக அறிக்கை கொடுத்திருக்கிறார்கள்.

கார் கம்பெனிகளில் வேலை செய்து வந்த இரண்டு பெண்கள் பலவந்தமாக இழுத்துச் செல்லப்பட்டு பாலியல் பலாத்காரம் செய்து படுகாயம் அடைந்தவர்கள் மருத்துவமனையில் இறந்திருக்கிறார்கள்.

இந்த ஒரு சில சம்பவங்கள் தான் வெளியில் வந்திருக்கிறது ஏராளமான பெண்கள் மானபங்கப்படுத்தி பழி வாங்கப்பட்டது ஊடகங்களுக்கு தெரிவிக்கவில்லை.

இதுதான் உண்மை நிலவரம் என்று பத்து சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்லுகிறார்கள்.

தேசிய மகளிர் ஆணையம் மூன்று முறை கடிதம் அனுப்பி டி.ஜி.பி.யோ. தலைமைச் செயலாளர். முதலமைச்சர் அலுவலகமோ எந்த பதிலும் சொல்லவில்லை.

இதுவரை 6 ஆயிரம் வழக்குகள் பதிவு செய்ததாக கூறும் அரசு இதனால் என்ன பயன் தற்பொழுது இந்திய நாட்டுக்கு அவமானமான கேவலமான மிகவும் வன்மையாக கண்டிக்க தக்க இழிவான செயல்கள் பத்திரிக்கையில் எழுத முடியாத அளவுக்கு கொடுமையான செயல்களை பெண்கள் சந்தித்து வருவதை ஒருநாளும் யாரும் ஏற்றுக்கொள்ள முடியாது.

உலக அளவில் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் இந்த நிலைக்கு சம்பவத்துக்கு மணிப்பூரில் காங்க்டோபி மாவட்டத்தில் பி பைணேம் மலை பிரதேசத்தில் குக்கி நாகா இன மக்களும் சமவெளியில் வாழுகிற மெய்திஇன மக்களால் கொடுமைக்கு ஆளாகி இருக்கிறார்கள்.

தற்பொழுது கீழ் சமவெளியில் வாழ்ந்து வருகிற மெய்தி மக்கள் பழங்குடி மக்கள் கிடையாது அவர்கள் தங்களை வைஷ்ணவர் எனக் கூறி உயர்ந்த ஜாதி என்று பெருமை படுத்திக் கொள்பவர்கள் எதற்காக அவர்களை மலைவாழ் மக்கள் பட்டியலில் சேர்க்க முதலமைச்சர் முயற்சிப்பது தான் இந்த கலவரத்துக்கு காரணம் அந்த நிலை பாட்டை கைவிட்டாலே இந்த கலவரம் அடங்கி விடும்.

இதை பிரதமர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து இந்த முதலமைச்சர் ஒரு தலைப்பட்சமாக செயல்படுவதை கண்டித்து அவரை பதவி நீக்கம் செய்து நல்ல நடுநிலையோடு செயல்படுகிற ஒருவரை முதலமைச்சராக மாற்ற வேண்டும்.

இந்த நிலைப்பாடு என்பது இந்தியாவில் ஒன்றிய அரசு தயவுதாட்சண்யம் இல்லாமல் நடுநிலையோடு இதை சரி செய்வதற்கு எப்பொழுது நடவடிக்கை எடுக்க போகிறது.

ஒன்றிய அரசு எப்போது கலவரத்தை அடக்கும் என நான் கேட்கவில்லை இந்தியாவில் வாழும் மக்கள் ஒட்டுமொத்தமாக கேட்கிறார்கள்.

மணிப்பூர் மக்கள் தொகையில் மெய்திகள் 57%

குக்கி. நாகா மக்கள் 43%

இதில் குக்கி மட்டும் 30%

மெய்திகளில் அதிகமான இந்துக்கள் குக்கிகள் நாகாக்களில் பெரும்பாலோர் கிறிஸ்துவ மக்கள்

1961 வருடத்தில்62% எண்ணிக்கை இருந்த இந்துக்கள் 2011 இல் 41% குறைந்துவிட்டது.

1961 வருடத்தில்19 % இருந்த கிறிஸ்துவர்கள் எண்ணிக்கை இப்பொழுது 49% உயர்ந்து இருக்கிறது இதுதான் இந்து அமைப்புகள் ஏற்படுத்துகிற பிரச்சினை

60 எம்.எல்.ஏ.க்கள் கொண்டமணிப்பூரில் மாநிலத்தில் சமவெளியில் 40 எம்.எல்.ஏ. மலைவாழ் மக்கள் 20 எம்.எல்.ஏ. தொகுதிகள் குக்கிகள் பெரும்பான்மையாக இருக்கிற இந்த சூழ்நிலையில் மெய்தி மக்களுக்கு பழங்குடி அந்தஸ்து வழங்க முயற்சிப்பது தான் இந்த பிரச்சினைக்கு காரணம்.

தயவு செய்து ஒன்றிய அரசு மக்களை மதித்து அமைதியாக வாழ வேண்டும் மெய்தி இன மக்களுக்காக மலைவாழ் அந்தஸ்து எஸ்.டி. ஆக அறிவிப்பு செயலை கைவிட்டு அமைதி ஏற்படுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதுதான் இந்த கலவரத்தை அடக்குவதற்கு அமைதியாக மக்கள் வாழ்வதற்கு ஏற்ற நடவடிக்கையாக இருக்கும் இந்த கலவரத்தை விரைவில் அடக்குவது ஒன்றிய அரசு காலம் தாழ்த்தாமல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தியாவில் மதத்தின் பெயரால் மொழியின் பெயரால் எந்த செயலையும் செய்து வெற்றி பெற்றுவிட முடியாது.

அமைதியாக மக்கள் வாழ்வதற்கு ஒன்றிய அரசு சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் இந்த மன்னிக்க முடியாத குற்ற சம்பவங்கள் நடந்து இரண்டு மாதங்களுக்கு மேல் ஆகி இருக்கிறது இதற்கு முன்பே குற்றவாளிகளை கைது செய்து சட்டப்படி நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும் கலவரக்காரர்களை கடுமையாக நடவடிக்கை எடுத்து இந்திய ராணுவ படையின் மூலம் இரண்டு நாட்களில் அடக்கி இருந்தால் இத்தனை சேதங்கள் ஏற்பட்டிருக்காது.

இத்தனை உயிர்கள் பலியாகி இருக்காது எத்தனை சகோதரிகளுக்கு பாலியல்தொல்லை நடந்திருக்காது இதையெல்லாம் ஏற்றுக்கொள்ள முடியாது மன்னிக்க முடியாது இதற்கு பொறுப்பேற்று அந்த மாநில முதலமைச்சர் முதலில் பதவி விலக வேண்டும் அல்லது பதவி நீக்கம் செய்ய வேண்டும்.

அவரை கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும் அப்படிப்பட்ட மக்கள் விரோத எண்ணம் கொண்டவர்கள் நாட்டில் ஆட்சிக்கு வருவது அவமானம் கேவலம்.

இதனால் தான் நம்முடைய உச்ச நீதிமன்றம் தலையிட நேரிடும் சூழ்நிலை வரும் என்று பகிரங்கமாக அறிவித்துள்ளது.

இந்த வன்கொடுமை காரணங்களுக்கு யார் காரணமோ அந்த மாநில காவல் துறையில் இருப்பவர்களையும் அதிகாரிகளையும் அமைச்சர்களையும் அடையாளம் கண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஒரு சமுதாய மக்கள் இருந்தால் அவர்களை அழிப்பது என்று மெஜாரிட்டி சமுதாயமக்கள் நாட்டில் செயல்பட்டால் அனுமதிக்கலாமா? ஜனநாயகம் மனிதநேயம் காக்கப்பட வேண்டாமா இப்படிப்பட்ட இழிவான செயலுக்கு யார் காரணம் என்பதை இன்றைய அரசு தயவு தாட்சண்யம் இல்லாமல் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கார்கில் போரில் இந்திய நாட்டுக்காக ராணுவத்தில் பணியாற்றியவரின் குடும்பமே சித்ரவதை ஆகியிருக்கிறது என்பதனை சொல்லும் பொழுது நினைக்கும்பொழுது எந்த ஒரு இந்திய குடிமகனும் மனசாட்சியோடு இதை ஏற்றுக்கொள்ள முடியுமா?

இந்த நாட்டில் சுதந்திரம்பெறுவதற்காக உழைத்தவர்கள் இந்துக்களும் இஸ்லாமியர்களும் கிறிஸ்தவர்களும் சீக்கியர்களும் புத்த மதத்தினரும் அனைத்து மத மக்களும் அனைத்து சமுதாய மக்களும் அண்ணல்மகாத்மா காந்தியோடு சேர்ந்து உழைத்தவர்கள். அப்படிப்பட்ட இந்தியா நாட்டை கலவர நாடாக ஆக்கி விடாதீர்கள். உடனடியாக மணிப்பூர் கலவரத்தை அடக்குங்கள்!

# தமிழ்நாட்டில் மத்திய சித்த மருத்துவப் பல்கலைக்கழகம் அமைக்கப்படுமா?

## மக்களவையில் டி.ஆர்.பாலு கேள்வி!



புதுடெல்லி, ஜூலை 25-

சித்த மருத்துவம் மற்றும் இயற்கை மருத்துவ முறைகளில் தமிழ்நாடு தொன்று தொட்டு வரலாற்றுப் பெருமையையும் நெடிய மரபையும் பெற்றுத் திகழ்வதைக் கருத்தில் கொண்டு தமிழ்நாட்டில் சித்த மருத்துவத்துக்கான மத்திய பல்கலைக் கழகம் அமைத்திட முன்வருமா? அப்படி ஒரு திட்டம் இல்லை என்றால் அதற்கான காரணம் என்ன? சித்த மருத்துவத்தில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கும் இந்த தொன்மையான மருத்துவ முறையை மக்களிடம் கொண்டு செல்ல ஒன்றிய அரசு எடுத்து வரும் முயற்சிகளும் நடவடிக்கைகளும் என்னென்ன? என்ற கேள்வியை திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு மக்களவையில் எழுப்பி இருந்தார்.

**மத்திய பல்கலைக்கழகம் உருவாக்கத் திட்டம் இல்லை.**

மக்களவையில் 21.7.2023 அன்று இதற்கு பதில் அளித்த ஒன்றிய ஆயுஷ் துறை அமைச்சர் சர்பானந்த சோனாவால் அவர்கள், ஒன்றிய அரசு சார்பில் தமிழ்நாட்டில் சித்த மருத்துவக் கல்விக்கும் ஆராய்ச்சிக்கும் மத்திய பல்கலைக்கழகம் அமைக்கும் திட்டம் எதுவும் இல்லை என்று தெரிவித்தார். ஆனால், சித்த மருத்துவ மத்திய பல்கலைக்கழகம் அமைக்கும் திட்டம் ஒன்றிய அரசிடம் இல்லாததற்கான காரணத்தை ஆயுஷ் அமைச்சர் சரபானந்த சோனாவால் அவர்கள், தனது பதிலில் தெரிவிக்கவில்லை.

சித்த மருத்துவம் பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும் இந்த தாயக மருத்துவக் கலையை மேலும் மேம்படுத்திடவும் மக்களிடையே இந்த தொன்மையான மருந்துகளையும் சிகிச்சை முறைகளையும் மக்களிடம் பிரபலப்படுத்த அரசு மேற் கொண்டு வரும் நடவடிக்கைகள் குறித்த கேள்விக்கும் தனது எழுத்து பூர்வமான பதிலில் அமைச்சர் தெரிவித்தார்.

தேசிய அளவில் சித்தா ஆய்வுகளை ஊக்குவிக்கவும் மேம்படுத்திடவும் மத்திய சித்தா ஆய்வுக் குழுவும், சென்னையில் தேசிய சித்தா நிறுவனமும் ஒன்றிய அரசால் அமைக்கப்பட்டுள்ளது. சித்த மருத்துவம் தொடர்பான கல்வி, தகவல்கள் மற்றும் அவற்றை பரவலாக்கிட தனியாக ஒரு திட்டத்தை ஒன்றிய அரசு செயல்படுத்தி வருகிறது.

தமிழக சித்த மருத்துவத் தயாரிப்புகளான நிலவேம்பு, கபசுரக் குடிநீர் ஆகியவை கொரோனா பெருந்தொற்றை கட்டுக்குள் வைப்பதில் பெரும் பங்கு ஆற்றின. அதனைத் தொடர்ந்து இந்த இரு சித்த மருந்துப் பொருட்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு அவை டெங்கு காய்ச்சல், சிக்குன்குனியா போன்ற கடுமையான நோய்களைக் குணப்படுத்தும் ஆற்றல் கொண்டவை என்பது உறுதிப்படுத்தப்பட்டது. இந்த ஆய்வுக் கட்டுரைகள் அரசு சார்பாக ஒன்றிய அரசின் சித்தா நிறுவனங்களால் வெளியிடப்பட்டன என்று தனது பதிலில் ஆயுஷ் அமைச்சர் சோனாவால், முன்னாள் ஒன்றிய அமைச்சரும் திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர்.பாலு அவர்களுக்கு அளித்த பதிலில் விரிவாக தெரிவித்தார்.

ஒன்றிய அமைச்சர் சர்பானந்த சோனாவால் அவர்கள் தனது பதிலில் குறிப்பிட்ட தேசிய சித்தா நிறுவனம், தி.மு.க. அங்கம் வகித்த சென்ற ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு காலத்தில் 2005ஆம் ஆண்டில் சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு அமைக்கப்பட்டது. தேசிய அளவில், சித்த மருத்துவ ஆய்வைப் பொறுத்த வரை சென்னை தாம்பரத்தில் அமைந்துள்ள இந்த நிறுவனம்தான் தலைமை நிறுவனமாகும். இதனைக் கருத்தில் கொண்டே தமிழ்நாட்டில் சித்த மருத்துவத்துக்கான மத்திய பல்கலைக் கழகம் உருவாக்க ஒன்றிய அரசிடம் கருத்துரு உள்ளதா என்ற கேள்வியை டி.ஆர். பாலு நாடாளுமன்றத்தில் எழுப்பினார் என்பதும், தாம்பரம் தேசிய சித்தா நிறுவனம் திருப்பெரும்புதூர் மக்களவைத் தொகுதியில் அமைந்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பி.ஜே.பி. அரசால் போதும் இந்த அவமானம்!

# மனதை நோகடிக்கும் மணிப்பூர் கொடூரம்!

## ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் வேதனை!

சென்னை, ஜூலை 25-

மணிப்பூரில் தற்போது நடைபெற்று வரும் பி.ஜே.பி. அரசால் நடைபெற்ற கொடூரம் உலகில் வேறு எங்கும் நடக்கக்கூடாது என வேதனை தெரிவித்து ‘போதும் இந்த அவமானம்’ மனதை நோகடிக்கும் மணிப்பூர் கொடூரம் என்ற தலைப்பில் தினத்தந்தி நாளேடு தனது 24.7.2023 தேதிய நாளேட்டில் தலையங்கம் எழுதியுள்ளது.


தலையங்கம்
தினத்தந்தி
24.7.2023
மனதை நோகடிக்கும் மணிப்பூர் கொடூரம்

அது வருமாறு:-

“இன்று நாட்டு மக்கள் அனைவரோடும் ஜனநாயக கோவிலில் நின்று கொண்டு இருக்கும் வேளையில், மணிப்பூரில் நடந்த சம்பவம் குறித்து என் மனம் கவலையாலும், கோபத்தாலும் நிறைந்திருக்கிறது. இந்த சம்பவம் எந்தவொரு பண்பட்ட சமுதாயத்திலும் வெட்கக்கேடான ஒரு செயலாகும். இந்த பாவச்செயலை செய்த கொடியவர்கள் யாராக இருந்தாலும், எத்தனை பேராக இருந்தாலும் அது ஒரு பக்கம். ஆனால், ஒட்டுமொத்த நாடே அவமானப்பட்டு நிற்கிறது. 140 கோடி மக்களும் கவலையில் மிதக்கிறார்கள். நான் அனைத்து முதல் மந்திரிகளையும் கேட்டுக்கொள்கிறேன். உங்கள் மாநிலங்களில் சட்டம்ஒழுங்கை வலுப்படுத்துங்கள், பெண்கள் பாதுகாப்புக்காக கடுமையான நடவடிக்கை எடுங்கள். தவறு செய்தவர்கள் யாரும் தப்பமுடியாது. சட்டம் தன் முழு பலத்தோடு நடவடிக்கைகளை எடுக்கும். மணிப்பூர் மகள்களுக்கு நடந்ததை ஒருபோதும் மன்னிக்க முடியாது” என்று கவலையோடும், கடும் சினத்தோடும் கூறினார், பிரதமர் நரேந்திர மோடி. மணிப்பூர் மாநில மலைப்பகுதியில் குகி என்ற பழங்குடியின மக்களும், சமவெளியில் மெய்தி இன மக்களும் வாழ்ந்து வருகிறார்கள். இதில் மெய்தி இன மக்கள் தங்களையும், பழங்குடியின மக்கள் பட்டியலில் சேர்க்கவேண்டும் என்று கோரி வருகிறார்கள். இதற்கு கடுமையான எதிர்ப்பு தெரிவிக்கும் குகி இன மக்கள், கடந்த மே மாதம் 3ந்தேதி மணிப்பூரில் நடத்திய பேரணியின்போது கலவரம், வன்முறை ஏற்பட்டது. இரு இன மக்களும் ஆக்ரோஷமாக மோதிக்கொண்டனர். பல வழிபாட்டு தலங்கள், வீடுகள், கடைகள் தீவைத்து கொளுத்தப்பட்டன. அன்று முதல் பல நாட்கள் தொடர்ந்து கலவரம் நீடித்தது. 150க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர். எண்ணற்றோர் காயம் அடைந்தனர். ராணுவமும், துணை ராணுவமும் போலீசாருடன் குவிக்கப்பட்டுள்ளனர். சமாதான முயற்சிகள் நடந்தாலும் இது வரை பலனளிக்கவில்லை. இந்த நிலையில், மணிப்பூர் கலவரம் தொடங்கிய மே 3ந்தேதிக்கு அடுத்த நாள், அதாவது 4ந்தேதி 2 பழங்குடியின பெண்கள் தங்கள் கிராமத்தை ஒரு வன்முறை கும்பல் தாக்கியபோது, அவர்களிடம் இருந்து தப்ப முயற்சித்து ஓடிய நேரத்தில், அந்த கும்பல் அவர்களை நிர்வாணப்படுத்தி ஊர்வலமாக அழைத்து சென்றதாக ஒரு வீடியோ 77 நாட்கள் கழித்து, இப்போது சமூகவலை தளங்களில் வெளியாகியது, நாடு முழுவதையும் வேதனையால் தலைகுனிய வைத்துள்ளது. இதோடு அந்த கொடியவர்கள் விட்டுவிடவில்லை. அதில், ஒரு 21 வயது பெண்ணை கும்பலாக கற்பழித்தனர். இதை தடுக்க முயன்ற அந்த பெண்ணின் 19 வயது சகோதரனையும் கொலை செய்துவிட்டனர்.

இது மட்டுமல்லாமல் கார் கழுவும் நிலையத்தில் வேலை பார்த்த மேலும் 2 பெண்களும் கற்பழிக்கப்பட்டு கொல்லப்பட்டுள்ளனர். இதில் முதல் வீடியோ நாடு முழுவதையும் அதிர்ச்சி அடைய வைத்துள்ளது. இப்போதுதான் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். “இவ்வளவு நாள் போலீஸ் என்ன செய்துகொண்டிருந்தது?” என்பதுதான், இப்போது நாட்டு மக்கள் கேட்கும் கேள்வி. சுப்ரீம் கோர்ட்டு தானாக முன்வந்து இந்த வழக்கை எடுத்துள்ளதோடு, மத்திய அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால், தாங்களே நடவடிக்கை எடுக்க நேரிடும் என எச்சரித்துள்ளது. மத்திய அரசாங்கம் மணிப்பூர் பிரச்சினைக்கு உடனடியாக ஒரு முற்றுப் புள்ளி வைக்கவேண்டும். இரு சமூகத்தினரையும் ஒற்றுமைப்படுத்தி சகோதரர்களாக வாழ வழிசெய்ய வேண்டும். போதும் இந்த அவமானம், இனி ஒருபோதும் இப்படி ஒரு வெட்கக்கேடான சம்பவம் நாட்டில் எங்கும் நடக்கக்கூடாது.

இவ்வாறு தனது வேதனையை ‘தினத்தந்தி’ வெளிப்படுத்தியுள்ளது.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## மயிலை இரா. காசிச்சாமி

**ஜூலை 25 (1992)**



தூத்துக்குடி மாவட்டத்தில் பிறந்த இவர் சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம் ஆகியவற்றில் தீவிரமாய் பணியாற்றி, கழகம் துவக்க காலம் முதல் கழகப் பணியாற்றத் தொடங்கினார். 1952 முதல் சென்னை மாவட்டத்தில் கீழ்ப்பாக்கம் பகுதியிலும் பின்னர், மயிலை பகுதியில் தனது இறுதிநாள் வரை கழகப் பணியாற்றியவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டத்திலும், ஈழத்தமிழர் பாதுகாப்பு போராட்டத்திலும் பங்கேற்று சிறை சென்றவர். மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

1968ஆம் ஆண்டு மயிலை பகுதி, 94வது வார்டு மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும் தொடர்ந்து மயிலை வார்டு குழுத் தலைவராகவும் சிறப்பாக பணியாற்றி பொதுமக்களிடம் பாராட்டைப் பெற்றவர்.

இவர் பகுதிக் கழகப் பொறுப்பாளராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

தமிழ்நாடு வணிகர்களின் மத்தியில் கழக உணர்வை வளர்த்து அதனடிப்படையில், தமிழ்நாடு வர்த்தக கழக பொதுச்செயலாளர் பொறுப்பேற்று பணியாற்றியவர்.

தலைவர் கலைஞர் அவர்களால் “மயிலையில் கழகம் வளர்த்த சிங்கம்” என பாராட்டப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**